www.Padasalai.Net www.TrbTnpsc.com
MCQS தேர்வை முடித்தவுடன் விடைகளை நாளை எனது யூடூபில் சரிபார்த்து கொள்ளவும்



இன்றும் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களில் இருந்து கொடுக்கப்படும்

பொருளியல்

80 x 1 = 80

1) மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்
(a) ஆடம் ஸ்மித் (b) இலயனல் ராபின்ஸ் (c) ஆல்ஃபிரட் மார்ஷல்
(d) சாமுவேல்சன்

2) பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை
(a) எண்ணற்ற விருப்பங்கள் (b) அளவற்ற வளங்கள்
(c) பற்றாக்குறை
(d) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

3) நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது
(a) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்
(b) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
(c) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
(d) ஒட்டு மொத்த பொருளாதாரத் தொடர்பு

4) கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?
(a) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 25% அதிகரித்துள்ளது
(b) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைப் பெற்றுள்ளது
(c) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது
(d) கடந்த ஆண்டுபொது விலை 4% அதிகரித்துள்ளது.

5) பொருந்தா ஒன்றைக் கண்டறிக
(a) “நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை"
(b) “பொருளாதாரக் கோட்பாடுகள்"
(c) “பொருளாதாரஅறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்”
(d) "மற்றவை மாறாதிருக்கும்போது”

6) சமநிலை விலை என்பது அந்த விலையில்
(a) எல்லாம் விற்கப்படுகிறது
(b) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
(c) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
(d) மிகைத்தேவை பூஜ்ஜியம்

7) நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்
(a) ஆல்ஃபிரட் மார்ஷல் (b) ஆடம் ஸ்மித் (c) இலயன்ஸ் ராபின்ஸ்
(d) பால் அ சாமுவேல்சன்

8) விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்றுவழிகளில் பயன்படத்தக்க சாதனங்களளோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர்.


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

(a) இலயனல் ராபின்ஸ் (b) ஆடம் ஸ்மித் (c) ஆல்ஃபிரட் மார்ஷல்
(d) பால் அ சாமுவேல்சன்

9) பொருளாதாரத்தின் தந்தை யார்
(a) மாக்ஸ் முல்லர் (b) ஆடம் ஸ்மித் (c) கார்ல் மார்க்ஸ்
(d) பால் அ சாமுவேல்சன்

10) பொருளியல் என்பது ஒரு சமூகஅறிவியல் என்று கூறுவர். ஏனெனில்
(a) காரணம் மற்றும் விளைவுகளுக்கிடையே உள்ள தொடர்பு
(b) விதிகளை உருவாக்குவதற்கு தொகுத்தாய்வு முறையும், பகுத்தாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.
(c) பரிசோதனைகள் (d) மேற்கூறிய அனைத்தும்

11) பயன்பாடு என்பது
(a) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
(b) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
(c) பண்டங்களின் மொத்த மதிப்பு
(d) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

12) அங்காடி என்பது
(a) பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
(b) பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
(c) விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்
(d) நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்

13) எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?
(a) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
(b) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை
(c) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு
(d) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது

14) வளர்ச்சி இலக்கணம் என்பது
(a) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
(b) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்
(c) செல்வத்தை உற்பத்தி செய்வது மற்றும் பகிர்வது
(d) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்

15) பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது
(a) விலைக் கோட்பாடு (b) வருமானக் கோட்பாடு
(c) வேலைவாய்ப்புக் கோட்பாடு (d) வணிகக் கோட்பாடு

16) _____ பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்

தினமும் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களிலில் இருந்து கொடுக்கப்படும்
WHATSAPP 8056206308
(CHANNEL NAME - RAVI MATHS TUITION CENTER)

இன்றும் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களில் இருந்து கொடுக்கப்படும்
(a) பண்டங்கள் (b) சேவைகள் (c) அங்காடிகள் (d) வருவாய்

17) பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க
(a) இது பயனுக்கும் சமமானது
(b) இது நீதிநெறி முக்கியத்துவம் கொண்டது
(c) இது மகிழ்வுக்கு சமமானது
(d) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது

18) பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?
(a) ஆடம் ஸ்மித் (b) மார்ஷல் (c) ராபின்ஸ் (d) ராபர்ட்சன்

19) தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை
(a) பகுத்தாய்வு முறை (b) தொகுத்தாய்வு முறை
(c) இயல்புரை அறிவியல் (d) நெறியுரை அறிவியல்

20) விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?
(a) விலை (b) மொத்தச் செலவு (c) இறுதி சமநிலை வருவாய்
(d) இறுதி சமநிலைச் செலவு

21) புதிய பொருளாதாரத்தின் தந்தை யார்?
(a) மார்க்ஸ் முல்லர் (b) ஆடம்ஸ்மித் (c) J.M.கீன்சு
(d) கார்ல் மார்க்ஸ்

22) பேரியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?
(a) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்.
(b) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
(c) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள். (d) விலைக் கோட்பாடு.

23) ஆய்க்கோஸ் (Oikos)என்றால் _________ என்று பொருள்படும்.
(a) பாலிஸ் (b) நிர்வாகம் (c) இல்லங்கள்
(d) மேற்கூறிய அனைத்தும்

24) நோமோஸ் (Nomos)என்றால் _____ என்று பொருள்படும்.
(a) பாலிஸ் (b) நிர்வாகம் (c) இல்லங்கள் (d) எதுவுமில்லை

25) பொருளியல் என்ற சொல் ____ சொல்லிலிருந்து வந்தது.
(a) இலத்தீன் (b) பழமையான கிரேக்க (c) ஸ்பேனிஸ்
(d) பிரிட்டன்

26) "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்று கூறியவர் _____.
(a) ஆடம்ஸ்மித் (b) இலயனல் ராபின்ஸ் (c) ஆல்ஃபிரட் மார்ஷல்
(d) சாமுவேல்சன்

27) 'நலஇயல்' என்பது_________.
(a) மகிழ்ச்சி (b) தனி மனிதனின் நலம்
(c) ஒட்டுமொத்த மக்களின் நலம் (d) மேற்கூறிய அனைத்தும்

28) பொருளாதாரம் என்பது ______ அறிவியலாகும்
(a) சமூக (b) நீதி (c) இயற்பியல் (d) இயற்கை

29) _______ பொருளியல் எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல்.
(a) இயல்புரை (b) நெறியுரை (c) எதிர்மறை (d) எதுவுமில்லை

WHATSAPP 8056206308
(CHANNEL NAME - RAVI MATHS TUITION CENTER)

30) _____ மாற்றக்கூடியவை ஆகும்.
(a) பண்டங்கள் (b) பொருட்கள் (c) சரக்குகள்
(d) மேற்கூறிய அனைத்தும்

31) மூலதனப் பண்டங்கள்____ பண்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
(a) நுகர்வு (b) உற்பத்தி (c) இலவச (d) எதுவுமில்லை

32) ______ பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி பெறும் அறிவாகும்.
(a) இடம் (b) கால (c) அறிவு (d) சேவை

33) TR=_________
(a) P+Q (b) P-Q (c) P÷Q (d) PxQ

34) பகுத்தாய்வு முறையை ________ என்று அழைக்கப்படுகிறது.
(a) பகுத்தறியும் முறை (b) கருத்திலான முறை (c) (அ) மற்றும் (ஆ)
(d) எதுவுமில்லை

35) தொகுத்தாய்வு முறை _______ என்று அழைக்கப்படுகிறது.
(a) பகுத்தறியும் முறை (b) கருத்திலான முறை
(c) செயலறி முறை (d) மேற்காணும் அனைத்தும்

36) _______ என்பது பண்டங்களையும், பணிகளையும் பயன்படுத்துவதாகும்.
(a) உற்பத்தி (b) நுகர்வு (c) பகிர்வு (d) பொது நிதி

37) ________ என்பது செல்வத்தை உருவாக்குதல் என்று பொருள்படும்.
(a) உற்பத்தி (b) நுகர்வு (c) பகிர்வு (d) பொதுநிதி

38) ____ என்பது உற்பத்தி காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.
(a) உற்பத்தி (b) பரிமாற்றம் (c) பகிர்வு (d) நுகர்வு

39) "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய ஒரு பொதுக் கோட்பாடு" என்னும் நூல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _______.
(a) 1930 (b) 1936 (c) 1988 (d) 1990

40) நுண்ணியல் பொருளியலில் _______ யை பற்றி படிக்கிறோம்.
(a) தனிப்பட்ட மனிதர்கள்
(b) தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகள்
(c) இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் (d) மேற்கூறிய அனைத்தும்

41) நுண்ணியல் என்பது _________ ஆகும்.
(a) சிறிய (b) பெரிய (c) ஒட்டுமொத்த (d) அனைத்தும்

42) பேரியல் என்பது _______ ஆகும்.
(a) சிறிய (b) மிகச்சிறிய (c) பெரிய (d) எதுவுமில்லை

43) "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் ஒரு பொதுக் கோட்பாடு" என்னும் நூலை அறிமுகப்படுத்தியவர் _________.
(a) ஆல்ஃபிரட் மார்ஷல் (b) ஆடம் ஸ்மித் (c) இராபின்ஸ்
(d) J.M.கீன்சு

44) அரசின் நிறுவனங்கள், அரசின் பணிகள் மற்றும் அரசின் இயந்திரங்களோடு சார்ந்த நிதி நடவடிக்கைகளே________அகும்.
(a) நிதி நிர்வாகம் (b) பொது நிதி (c) அரசு (d) எதுவுமில்லை

இனிமேல் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களிலும் இருந்து கொடுக்கப்படும்
WHATSAPP 8056206308

இனமும் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களில் இருந்து கொடுக்கப்படும்

45) ________ என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும்.
(a) சுற்றுச் சூழல் (b) பொருளாதாரம் (c) வளர்ச்சி பொருளாதாரம்
(d) சுகாதாரப் பொருளாதரம்

46) பொருளியல் குறிப்பிடுவது ________.
(a) பற்றாக்குறை வளங்களும் குறிப்பிட்ட விருப்பங்களும்.
(b) மனித விருப்பமும் நிறைவடைதலும்.
(c) செல்வத்திற்கும் சேமிப்பிற்கும் உள்ள தொடர்பு.
(d) அரசு மேலாண்மை.

47) 'இயங்கா' நிலை என்பது _____.
(a) கணிதம் (b) வணிகக் கணிதம்
(c) மாற்றங்கள் ஏற்படாத காலம் (d) எதுவுமில்லை

48) பொருளாதாரத்தின் வேறு பெயர் _______.
(a) இந்தியப் பொருளாதாரம் (b) அரசியல் பொருளாதாரம்
(c) வணிகப் பொருளாதாரம் (d) கலப்பு பொருளாதாரம்

49) அளிவியல் பொருளாதாரம் ________ படங்களை உள்ளடக்கியது ஆகும்.
(a) கணிதம், அறிவியல்,பொருளியல்.
(b) பொருளியல், வணிகவியல், கணிதம்.
(c) புள்ளியியல், கணிதம், பொருளியல்.
(d) புள்ளியியல்,அறிவியல், கணிதம்.

50) ஆடம்ஸ்மித் நாடுகளின் செல்வம் என்ற புத்தகத்தை வெளியிட்ட ஆண்டு __________.
(a) 1776 (b) 1786 (c) 1886 (d) 1766

51) பொருளியல் என்ற சொல் ஆய்க்கனோமிக்ஸ் என்னும் ______________ சொல்லிலிருந்து வந்தது.
(a) கிரேக்க (b) பிரஞ்சு (c) லத்தீன் (d) ஸ்பானிஷ்

52) ஆய்க்கோல் என்பதன் பொருள் என்ன?
(a) நிர்வாகம் (b) பண்பாடு (c) நிதி (d) இல்லங்கள்

53) நேபோஸ் என்பதன் பொருள் என்ன?
(a) நிர்வாகம் (b) பண்பாடு (c) நிதி (d) அனைத்தும்

54) 'அரசியல் பொருளாதாரம்' என்று அழைக்கப்பட்ட இயல் 'பொருளியல்' என்று யாரால் மாற்றப்பட்டது?
(a) ஆடம் ஸ்மித் (b) மார்ஷல் (c) ராபின்ஸ் (d) சாமுவேல்சன்

55) தொன்மை காலத்தை சேர்ந்த பொருளியலறிஞர் யார்?
(a) சாமுவேல்சன் (b) மார்ஷல் (c) ஆடம் ஸ்மித் (d) ராபின்ஸ்

56) புதிய தொன்மை காலத்தை சேர்ந்த பொருளியலறிஞர் யார்?
(a) சாமுவேல்சன் (b) மார்ஷல் (c) ஆடம் ஸ்மித் (d) ராபின்ஸ்

57) புதிய யுகத்தை சேர்ந்த பொருளியலறிஞர் யார்?
(a) சாமுவேல்சன் (b) மார்ஷல் (c) ஆடம் ஸ்மித் (d) ராபின்ஸ்

58) நவீன யுகத்தை சேர்ந்த பொருளியலறிஞர் யார்?
(a) சாமுவேல்சன் (b) மார்ஷல் (c) ஆடம் ஸ்மித் (d) ராபின்ஸ்

59) ஒவ்வொரு மனிதனும் சுய ஆர்வத்தால் தூண்டப்படுவதாக கூறியவா யார்?

WHATSAPP 8056206308

(a) ஆடம் ஸ்மித் (b) மார்ஷல் (c) ராபின்ஸ் (d) சாமுவேல்சன்

60) பொருளியலை ஓர் இருண்ட அறிவியல் எனக் கூறியவர் யார்?
(a) ரஸ்கின் மற்றும் மார்ஷல் (b) கார்லைல் மற்றும் மார்ஷல்
(c) ரஸ்கின் மற்றும் கார்லைல் (d) மேற்கண்ட எவரும் இல்லை

61) பொருளியலை ஒரு கலையியல் என்றவர் யார்?
(a) A.C. பிகு (b) மார்ஷல் (c) அ மற்றும் ஆ (d) எதுவுமில்லை

62) பொருளியலை ஓர் அறிவியல் என்றவர் யார்?
(a) ராபின்ஸ் (b) ஜோர்டன் (c) ராபர்ட்சன் (d) அனைத்தும்

63) நெறியுரை கூற்று எது?
(a) பணவீக்கமே மேலானது
(b) ஆடம்பர பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வது நல்லதல்ல
(c) வருமானப் பகிர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும்
(d) அனைத்தும்

64) பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்றவர் யார்?
(a) கீன்ஸ் (b) மில்டன் பிரீட்மேன் (c) ராபர்ட்சன் (d) A.C. பிகு

65) நுகர்வோர் பண்டம் எது?
(a) தொலைக்காட்சி (b) நாற்காலி (c) கார் (d) அனைத்தும்

66) மூலதன பண்டம் எது?
(a) தொலைக்காட்சி (b) நாற்காலி (c) கார் (d) இயந்திரம்

67) நீடித்து இருக்கக்கூடிய பண்டம் எது?
(a) தொலைக்காட்சி (b) நாற்காலி (c) மேசை (d) அனைத்தும்

68) மூலப்பொருள் ______________ பயன்பாட்டை தரும்.
(a) அறிவு (b) இடம் (c) வடிவம் (d) காலம்

69) "அரசியல் பொருளாதாரம் தனது வரையறை மூலம் தனக்கு தானே குரல் வளையை நெரித்துக் கொள்கிறது' என்றவர் யார்?
(a) மார்ஷல் (b) கீன்ஸ் (c) மில்டன் பிரீட்மேன் (d) ஸ்டிக்லர்

70) “சமநிலை என்பது மாற்றமில்லா நிலையை அடைவது' என்றவர் யார்?
(a) மார்ஷல் (b) கீன்ஸ் (c) மில்டன் பிரீட்மேன் (d) ஸ்டிக்லர்

71) "நடப்பதற்கு வலது காலும் இடது காலும் எவ்வாறு அவசியமோ, அது போல பகுத்தாய்வு முறையும் தொகுத்தாய்வு முறையும் அறிவியல் ஆய்வுக்கு அவசியமாகும்' என்றவர் யார்?

(a) மார்ஷல் (b) கீன்ஸ் (c) மில்டன் பிரீட்மேன் (d) ஸ்டிக்லர்

72) தவறானது எது?
(a) பொருளாதார கோட்பாடு - மார்ஷல்
(b) நாடுகளின் செல்வம் - ஆடம் ஸ்மித்
(c) பொருளியல் அறிவியலின் தன்மையும் சிறப்பும் - பிகு
(d) வேலைவாய்ப்பு, வட்டி பணம் - கீன்ஸ்

73) நுண் பொருளியல் மற்றும் பேரியல் பொருளியம் என்ற சொற்களை முதலிய பயன்படுத்தியது யார்?
(a) கீன்ஸ் (b) ஆடம் ஸ்மித் (c) ராக்னர் ஃபிரிஷ் (d) சாமுவேல்சன்

தினமும் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களில் இருந்து கொடுக்கப்படும்
WHATSAPP 8056206308

தினமும் இதுபோன்ற தேர்வுகள் அனைத்து பாடங்களில் இருந்து கொடுக்கப்படும்

74) சுற்றுச்சூழல், பொருளியல் மற்றும் சூழலியல் ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பை படிப்பது எது?
(a) பன்னாட்டு பொருளாதாரம் (b) வளர்ச்சி பொருளாதாரம்
(c) சுகாதார பொருளாதாரம் (d) சுற்றுச்சூழல் பொருளாதாரம்

75) தவறானது எது?-பொருளியல் விதிகள்
(a) போக்குரைக் கூற்று (b) துல்லியமானவை அல்ல
(c) உறுதியிட்டு சொல்ல இயலாது (d) கணிப்பு தவறாது

76) பொருளாதார நடவடிக்கையின் துவக்கப் புள்ளி எது?
(a) நுகர்வு (b) உற்பத்தி (c) பரிமாற்றம் (d) பகிர்வு

77) தவறானது எது?
(a) நிலம் (b) உழைப்பு (c) வட்டி (d) மூலதனம்

78) ஒரே ஒரு மாறியின் மூலம் கிடைக்கக்கூடிய சமநிலை ______________ சமநிலை.
(a) நுகர்வோர் (b) உற்பத்தியாளர் (c) பகுதி (d) பொது

79) பயன்பாட்டின் இயல்பு எது?
(a) உளவியல் சார்ந்தது
(b) பயன்பாடும் உபயோகமும் ஒன்றானவை அல்ல
(c) தனித்தும் சார்ந்துமிருக்கும் (d) அனைத்தும்

80) ______________ அறிவியல் உள்ளதை உள்ளவாறு கூறுகிறது.
(a) இயல்புரை (b) நெறியுரை (c) பகுத்தாய்வு (d) தொகுத்தாய்வு

***************************************


# TNPSC TEST SI EXAM

ஏப்ரல் 6 முதல் தினமும் என்னுடைய WHATSAPP GROUP ல் தமிழ் ஆங்கிலம் கணிதம் அறிவியல் சமூக அறிவியல் பாடங்களி?ல் இருந்து 200 முதல் 250 தேர்வுகள் கொடுக்கப்படுகிறது . விடைகள் எனது YOUTUBE இல் பார்க்கலாம் அல்லது கட்டணம் RS.750 செலுத்தி விடைகளுடன் WHATSAPP குரூப்பில் இணையவும். முடிந்தால் உங்கள் ந?ண்பர்களுக்கு பகிரவும்.

இலவச TEST குரூப்பில் இணைய WHATSAPP 8056206308 க்கு TNPSC TET SI EXAM என்று மெசேஜ் செய்யவும்

(CHANNEL NAME - RAVI MATHS TUITION CENTER)